# மாண்டிசொரியும் ஆன்மீகமும்

அன்பர்களே!

``அரிது அரிது மானிடனாய்ப் பிறப்பது அரிது`` என்கிறார் ஔவையார்.
மனிதனாகப் பிறந்ததன் பயன் இறையாமையை நம்முள்ளும்,அனைத்துப் பொருள்களிலும்,செயல்களிலும் உணர்ந்து பரவசம் கண்டு மகிழ்வதே ஆகும்.அதனால் சமரச அன்பும்,அரவணைப்பும்,விட்டுக்கொடுக்கும் மனோபாவமும்,தியாக எண்ணமும் மனிதசமூகத்தில் வளரரும்.

முழுமையான ஒழுக்க உணர்வுடன் கூடிய பொறுப்புள்ள சுதந்திரமே மோட்சம் என்ற பகவத்கீதையின் கருத்தே மாண்டிசொரியின் கல்விப்பயன் எனலாம்.
அதற்கு முதலில் பெற்றோர்கள் கர்ப்ப காலம் முதல் மேரி,கௌசல்யா தேவி,தேவகி,யசோதை போல சிசுவை ஆனந்தமாக,பரிபக்குவமாக,ஞானமயமாகச் சுமந்து காக்க வேண்டும்.தன் பிள்ளை கடவுளின் ப்ரதிநிதி என்ற உன்னத எண்ணம் தேவை.ஆனால் அது எல்லைமீறிய பாதுகாப்பாலும்,அன்பாலும் சித்தார்த்தராக வளர்ந்துவிடக் கூடாது.உலகின் அனைத்து விஷயங்களிலும் வயதுக்கு ஏற்ப அனுபவம் பெற நாம் உதவியும் ஊக்குவிக்கவும் வேண்டும்.

*எந்த உறவையும் மதிக்கக் கற்றுக் கொடுங்கள்.

*உலகில் யாரும் குறையில்லாத மனிதர்கள் இல்லை என்ற உண்மை புரிய வேண்டும்.

* ஒவ்வொருவரின் நல்ல பழக்கத்தினையும் நாம் எடுத்துக்கொள்ள வேண்டும்.

* எல்லா உயிரினங்களையும் ரசிக்கக் கற்றுக் கொடுங்கள்.

* எந்த ஒரு செயலிலும்,பேச்சிலும்,பொருளிலும் அழகை அனுபவிக்கக் கற்றுக் கொடுங்கள்.
*தவறு செய்தால் அதை பயமில்லாமல் ஒத்துக் கொள்ளும் பக்குவத்தை வளர்க்க இடம் கொடுங்கள்.அதனால் உண்மை பேசும் குணம் வளரும்.

*எந்த ஒரு செயலிலும் நிதாதனமும் விழிப்புணர்வும் தேவை.அந்த விழிப்புணர்வு குழந்தைக்குள் உண்டாக நாம் ஊக்குவிக்க வேண்டும்.

*எந்த மதத்தினைச் சார்ந்த பிள்ளைக்கும் அந்த மதத்தினைப் பற்றி வயதிற்கு ஏற்ற அறிவு இருக்க வேண்டும்.

*ஆனால் மதத்துவேஷம் கூடாது.

*குறிப்பாக இந்துக் குழந்தைகள் மதச் சடங்குகளையும்,கருத்துக்களையும் வயதிற்கு ஏற்ப அறிந்து கொண்டு,அதை மகிழ்ச்சியுடன் பின்பற்ற வேண்டும்.

*விட்டுத்தருதல்,தியாகம்,உழைப்பு,அஹிம்சை நெறி ,பக்தி ஆகியவை வளர்க்கப் பட வேண்டும்.

*நமது கோவில்களில் உள்ள தத்துவங்களையும்,கலைகளையும் மதிக்கக் கற்றுக் கொடுக்க வேண்டும்.

*இந்தியாவின் பாரம்பரியமும் அதே சமயத்தில் வெளிநாடுகளில் உள்ள நல்ல பண்பாட்டுக் கூறுகளும் பின்பற்றப் பட வேண்டும்.

*ராமாயணம்---மகாபாரதம்---சிலப்பதிகாரம்---ஆழ்வார்கள்---நாயன்மார்கள்----விழாக்களின் தத்வங்கள் ஆகியவை போதிக்கப்பட வேண்டும்.சிறு யோகப்பயிற்சிகள்,சுவாசப் பயிற்சிகள் ,த்யானம்,பஜனைகள் கற்றுத்தர வேண்டும்.

* காந்தி-----சங்கரர்----ராமானுஜர்----பாரதியார்---குமரன்-----வ.உ.சி ஆகியோரின் வாழ்க்கை போதிக்கப் பட வேண்டும்.

* மரியா மாண்டிசொரியைப் பற்றி அறிய வேண்டும்.

*எதையும் தாங்கும் இதயமும்,ஏற்கும் மனப்பக்குவமும்,எப்படிப் பட்ட சூழலிலும் அமைதியும் மகிழ்ச்சியும் கொண்ட மனிதனை உருவாக்க நாம் பாடுபட வேண்டும்.

இவற்றை எல்லாம் நாம் முதலில் கடைப்பிடித்தால்,குழந்தைகள் தாமாகவே பின்பற்றுவார்கள்.
நன்றி!!!